# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்)

***1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி அமைச்சர் அவர்களினால் 2015, செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2015, மாச்சு மாதம் 30 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **7 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 009237-475 (2015/09)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 –** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) (1அ) என்னும் உட்பிரிவின் கீழான விதிப்பனவை பத்து சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கும்; அத்துடன்

(ஆ) சூதாட்ட தொழில் இடமொன்றில் நுழைகின்ற ஒவ்வொரு ஆளிடமிருந்தும் "கெசினோ நுழைவு விதிப்பனவு" என அழைக்கப்படும் புதிய அறவீடு ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கும் ஆனதாகும்.

**வாசகம் 3 –** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது 2013, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கி 2013, மே 31 ஆந் தேதி வரைக்கும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கானதாகும்.

**வாசகம் 4 –** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது முறையே 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழும், (1அ) என்னும் உட்பிரிவின் கீழும் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவுக்காக 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் ஏற்புடைமைக்கும் குறித்த சில ஏற்பாடுகளுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதாகும்.

**வாசகம் 5 –** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5(1) என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுகள் தொடர்பில் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமைக்கு ஏற்பாடு செய்வதற்கானதாகும்.

**வாசகம் 6 –** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது "ஆணையாளர்", "பிரதி ஆணையாளர்" அத்துடன் "வரிமதிப்பீட்டாளர்" என்னும் சொற்றொடருக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் புதிய வரைவிலக்கணத்தை பதிலீடு செய்வதற்காகும்.

**வாசகம் 7 –** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் புதிய பிரிவு ஒன்றைத் உட்படுத்துகின்றது. புதிய பிரிவானது ஒழுங்குவிதிகளை ஆக்கும் தத்துவத்திற்கு ஏற்பாடு செய்கின்றது.

**வாசகம் 8 –** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது விளைவாந்தன்மையதான திருத்தத்திற்கு ஏற்பாடு செய்வதற்கானதாகும்.

**வாசகம் 9 –** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஆண்டு ஒவ்வொன்றுக்கும் அட்டவணையிலுள்ள குதிரைப் பந்தயத் தொழில் மற்றும் பந்தயத் தொழில் தொடர்பில் விதிக்கப்படற்பாலதான அறவீட்டுத் தொகையை விதிப்பதற்கானதாகும்.

ச.வ.- ஓ. 12/2015

**1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

***1***. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், எல்லா நோக்கங்களுக்காகவும் 2015, சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

1988 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவினைத் திருத்துதல்.

***2***. (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், “ஐந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று” என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் :-

(அ) 2013, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2015, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்கு ஐந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று ; அல்லது

(ஆ) 2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும்

ஆண்டுக்கு பத்து சதவீதத்திலான அறவீடு ஒன்று.";

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அஅ) 2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் ஆண்டுக்கு இலங்கையில் சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் (இதனகத்துப்பின்னர் "கெசினோ நுழைவு அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப் படும்) சூதாட்ட தொழில் இடத்தில் நுழைகின்ற எவரேனும் ஆளிடமிருந்து அமெரிக்க டொலர்கள் நூறு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் மாற்றத்தகு வெளிநாட்டு நாணயத்தை அல்லது இலங்கை நாணயத்தை விதிப்பனவு ஒன்றாக சேகரித்தல் வேண்டும் :

ஆயினும் எவ்வாறாயினும், (1அஅ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகள் –

(அ) அத்தகைய சூதாட்ட தொழில் இடத்தின் முகாமைப் பணிப்பாளருக்கு அல்லது முகாமைச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது ஓர் ஊழியருக்கு ;

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான அவரது கடமைகளை பிரயோகிப்பதில், புரிவதில் அத்துடன் நிறைவேற்றுவதில் அத்தகைய தொழில் இடத்தில் பிரவேசிப்பதற்கு அது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு ; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு,

ஏற்புடையதாதல் ஆகாது.";

(3) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவில் :-

(அ) "(1அ) என்னும் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(1அ) மற்றும் (1அஅ)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) பந்தி (ஆ) இனை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(ஆ) ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அம்மாதத்தை உடன் அடுத்துவரும் மாதத்தின் முதலாவது வாரம் முடிவடையும் அன்று அல்லது அதற்கு முன்னர் 2ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழும் மற்றும் (1அஅ) என்னும் உட்பிரிவின் கீழும் விதிக்கப்பட்டுச் சேகரிக்கப்பட்ட அறவீடுகளை அனுப்புதல் வேண்டும்.";

(4) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவில் "(1அ) என்னும் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(1அ) மற்றும் (1அஅ) என்னும் உட்பிரிவுகளின்கீழ்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவினைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவானது "2013, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்கள் மற்றும் எண்களிலிருந்து "பதிவு செய்தல் வேண்டும்" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2013, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2013, மே 31ஆந் தேதிக்கு முன்னர் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்

குறிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றதான குதிரைப் பந்தய பணயக் காரரின் தொழிலை அல்லது சூதாட்டத்தை கொண்டு நடாத்தும் ஆள் ஒவ்வொருவரும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவு செய்தல் வேண்டும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில் "இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவினை சேர்ப்பதன் மூலமும்:

"(6) இப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு மேலாக 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க,உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் விபரத்திரட்டு முதலியன தொடர்பான XII ஆம் அத்தியாயத்தின் 106, 107, 108 மற்றும் 112ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் வரிமதிப்பீடு தொடர்பான XXII ஆம் அத்தியாயம், மேன்முறையீடுகள் தொடர்பான XXIII ஆம் அத்தியாயம், வரிமதிப்பீட்டின் இறுதித்தன்மை மற்றும் பிழையான விபரத் திரட்டுகளுக்கான தண்டம் தொடர்பான XXIV ஆம் அத்தியாயம் மற்றும் வரி அறவிடுதல் தொடர்பான XXVI ஆம் அத்தியாயம் அத்துடன் பொதுவிடயங்கள் தொடர்பான XXXI அத்தியாயம் என்பன இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு

செய்யப்பட்ட அறவீட்டின் கொடுப்பனவு தொடர்பில் விபரத்திரட்டினை கொடுத்துதவுதல், வரி மதிப்பீடுகள், வரி மதிப்பீடுகளுக்கு எதிரான மேன்முறையீடுகள், வரிமதிப்பீட்டின் இறுதித் தன்மை அத்துடன் பிழையான விபரத்திரட்டுகளுக்கான தண்டம், வரியினை அறவிடுதல் என்பவற்றிற்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ‘‘மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 38ஆம் பிரிவு’’ என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “உண்ணாட்டர சிறைச்சட்டத்தின் 190ஆம் பிரிவு” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ‘‘மொத்த விற்பனை வரவு வரியின் 42 அல்லது 43 ஆம் பிரிவு’’ என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 214 அல்லது 215 ஆம் பிரிவு’’; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் “மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 57ஆம் பிரிவு” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 209ஆம் பிரிவு” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் “மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 57ஆம் பிரிவு’’ என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ‘‘உண்ணாட்

டரசிறைச் சட்டத்தின் 209ஆம் பிரிவு'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது ''பிரதி ஆணையாளர்'' அல்லது ''வரி மதிப்பீட்டாளர்'' என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவுகளில் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, ''ஆணையாளர், சிரேட்ட பிரதி ஆணையாளர், பிரதி ஆணையாளர் அல்லது உதவி ஆணையாளர்'' என்னும் சொற்களை முறையே இடுவதன் மூலம் அப்பிரிவின் (2), (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளில் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

*ஒழுங்குவிதிகள்.*

6அ. (1) எக்கருமம் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதனில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட

பின்னர் வசதியானளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்துக்கென கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அதற்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி எதுவும் எத்தேதியன்று அவ்வாறு இல்லாதாக்கப்பட்டதெனக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவானது, "வரி மதிப்பீட்டாளர்", "ஆணையாளர் தலைமையதிபதி" மற்றும் "பிரதி ஆணையாளர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

" "ஆணையாளர் தலைமையதிபதி" மற்றும் "பிரதி ஆணையாளர்" என்பன முறையே அவற்றிற்கு மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; ".

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையினை மாற்றீடு செய்தல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையானது இத்தால் மாற்றீடு செய்யப்படுகின்றது என்பதுடன்,அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

**அட்டவணை I**

(பிரிவு 2)

பாகம் I

இதற்கான, I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு குதிரைப் பந்தயப் பணயத்தொழிலர் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவரினாற் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்-

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| **ஆண்டு** | **விதிப்பனவின் தொகை** |
| 1. *1988*,ஏப்பிறல் *1*ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், *2011*, ஏப்பிறல் *1*ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | ஒரு லட்சம் ரூபா. |
| 2. *2001*, ஏப்பிறல் *1*ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், *2002*, ஏப்பிறல் *1*ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் - | பத்து லட்சம் ரூபா. |
| 3. *2002*, ஏப்பிறல் *1*ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், *2005*, ஏப்பிறல் *1*ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்படுமிடத்து; | முப்பதாயிரம் ரூபா. |
| (ii தொழிலைக்கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன் படுத்தப்படாதவிடத்து. | பத்தாயிரம் ரூபா. |
| 4. *2005*, ஏப்பிறல் *1*ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், *2006*, ஏப்பிறல் *1*ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய்யப்படும் பந்தயத் தொழிலுக்காக- | |
| (i) முகவர்கள் மூலம். | பத்து லட்சம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்து வதன்மூலம். | இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத் தப்படாதவிடத்து | இருபத்தையாயிரம் ரூபா. |
| 5. *2006*, ஏப்பிறல் *1*ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால், *2013*, ஏப்பிறல் *1*ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய்யப்படும் பந்தயத்தொழிலுக்காக- | |
| (i) முகவர்கள் மூலம். | பத்து லட்சம் ரூபா. |

| | |
|---|---|
| (ii) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்துவதன்மூலம். | மூன்று லட்சம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டுநடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து. | ஐம்பதினாயிரம் ரூபா. |
| 6. 2013, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய்யப்படும் பந்தயத் தொழிலுக்காக- | |
| (i) முகவர் மூலம். | இருபது லட்சம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்துவதன்மூலம். | மூன்று லட்சம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து. | இருபத்தையாயிரம் ரூபா. |
| 7. 2015, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், தொடங்கும் ஒவ்வோராண்டுக்கும் செய்யப்படும் குதிரைப்பந்தயப் பணயக்காரரின் தொழிலுக்காக- | |
| (i) முகவர் ஊடாக. | நான்கு மில்லியன் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடியான ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்துவதன் மூலம். | அறுநூறு ஆயிரம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து. | ஐம்பது ஆயிரம் ரூபா. |

பாகம் II

இதற்கான, I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோராண்டுக்கும் சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளொருவரினாற் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான IIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்-

| நிரை I | நிரை II |
|---|---|
| **ஆண்டு** | **விதிப்பனவின் தொகை** |
| 1. 1988,ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோ ராண்டுக்கும். | பத்து லட்சம் ரூபா. |
| 2. 2001, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், 2002, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோ ராண்டுக்கும். | இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபா. |
| 3. 2002, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், 2005, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோ ராண்டுக்கும்- | |
| (i) சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவ தற்காக (ருட்ஜினோ விளையாடுதல் தவிர) | ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா. |
| (ii) ருட்ஜினோ மட்டுமே விளையாடுதல் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்து வதற்காக | ஐந்து லட்சம் ரூபா. |
| 4. ருட்ஜினோ விளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக, 2005, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால், 2013, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | ஐந்து கோடி ரூபா |
| 5. 2013, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோ ராண்டுக்கும் ருட்ஜினோ விளையாடுதல் உள் ளடங்கலாக பந்தயத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு, | நூறு மில்லியன் ரூபா. |
| 6. 2015, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோரு ஆண் டுக்கும் ருட்ஜினோ விளையாடுதல் உள்ளடங் கலாக பந்தயத் தொழிலைக் கொண்டுநடாத்து வதற்காக, | இரு நூறு மில்லியன் ரூபா.”. |

செல்லுபடியாகுதல்.

**10**. இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு சனவரி 1ஆந் தேதி தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை புறக்குறிப்பிடப்பட்ட தேதியன்று முடிவடைகின்றது மான காலப்பகுதியின் போது எவரேனும் ஆளிடமிருந்து ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழும் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழும் அத்துடன் (1ஆஆ) என்னும் பந்தியின் கீழும் அறவிடப்பட்டு, சேகரிக்கப்பட்ட அறவீட்டுத்தொகையானது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அத்தகைய எவரேனுமாளினால் செல்லுபடியாகும் முறையில் எல்லா நோக்கங்களுக்காகவும் அறவிடப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்:

ஆயினும், மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிவையோ அல்லது கட்டளையையோ அல்லது அக்காலப்பகுதியின் போது அறவிடப்பட்டு சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவீடு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளையோ பாதித்தல் ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11**. இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*